18th March 1965]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கோவிலில் இருக்கும் விக்கிரகங்கள் பாதுகாக்கப்படுவதாகச் சொல்லுகிறார்களே, வெளிப்புறங்களில் கண்டெடுக்கப்படும் விக்கிரகங்கள் எப்படிப் பாதுகாக்கப்படுகின்றன. அதற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை ரெவின்யூ இலாக்கா பாதுகாத்து வருகிறது. அதற்கப்புறம் சம்பந்தப்பட்டவர்கள் உரிமை கொண்டாடினால் அது கவனிக்கப்படும். அப்படி இல்லையென்றால் அவைகள் மியூசியத்திற்கு அனுப்பப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : விக்கிரகங்களுக்கு அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் கிராக்கி இருப்பதாகச் சொன்னார்கள். நாச்சியார் கோவிலில் இருக்கும் சர விளக்குப் போன்ற கோயில் அழகுப் பொருள்கள் செய்கின்ற கைத்தொழில் கூடத்தில் நல்ல விக்கிரங்களாகச் செய்து அவற்றை வெளி நாடுகளுக்கு அனுப்பலாம் அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்றுமதி செய்யலாம். ஆனால் அவர்கள் வேண்டுவது பழமையான விக்கிரகங்களைத்தான்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்து மதக் கோவில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போல ஜைனமதக் கோவில்களில் இருக்கும் விக்கிரகங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்து மதப்பொது கோவில்கள் எல்லாம் அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருக்கின்றன. இதற்குச் சட்டம் இருக்கிறது. ஆனால் ஜைனமத கோவில்களுக்கான சட்டம் இல்லை. ஜைன மத கோவில்களில் அக்கறையுள்ளவர்கள் அவைகளுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்று கோரினால் அது கவனிக்கப்படும்.

26—1—1965-ஐ துக்கநாளாகக் கடைப்பிடித்ததைத் தடுத்தல்

* 264 கேள்வி—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

26—1—1965-ந் தேதியினை துக்கதினமாகக் கொண்டாடப்பட்டதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Suitable instructions were issued to the concerned authorities to ensure that there was no breach of peace on that day. It is not in public interest to disclose the details.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த துக்கதினத்தைக் கொண்டாடக் கூடாது என்பதற்காகக் கனம் முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்குள்ள அழுத்தமான உணர்வைப் புலப்படுத்தும் வகையிலே இந்த மன்றத்திற்கு வெளியிலே தம்முடைய சக்திக்கு உட்பட்ட சாத்தியக் கூறுகளால் என்னன்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்பதைப்பற்றி விவரம் கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது நான் அளித்த விடையை விட அதிகமான விவரங்கள் கூறுவதற்கில்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : குடியரசு தினத்தன்று துக்க தினம் கொண்டாடுவதைத் தடுப்பதற்குச் சட்டபடி ஏதாவது ஆலோசனை கேட்கப்பட்டதா ? அப்படியென்றால் என்ன ஆலோசனை கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே விளக்கியிருக்கிறேன், அதற்கு மேல் சொல்லுவதற்கில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : 26-ம் தேதியை துக்கதினமாகக் கொண்டாட அவர்களுடைய இல்லங்களிலே கறுப்பு கொடி ஏற்றுவ தென்றும், அவர்களுடைய சட்டையிலே கறுப்புச்சின்னம் அணிந்து கொள் வதென்றும் திராவிட முன்னேற்ற கழகத் தோழர்களுக்கு தி.மு.க. கட்டளையிட்டிருந்ததென்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படி தனிப் பட்டவர்கள் இல்லத்திலே துக்கதினம் கொண்டாடுவதற்குப் பாதுகாப்பு ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குடியரசு தினத்தைத் துக்கதினமாகக் கொண்டாடுவது தவறு என்று நானும் கூறியிருக்கிறேன். அது அர சாங்கத்தின் கருத்தும் கூட. அவர்களுக்கு என்ன கட்டளை இடப்பட்டது என்று எனக்குத் தெரியாது. ஆனால் துக்கநாளைக் கொண்டாடியதைத் தொடர்ந்து வன்முறைச் செயல்கள் கையாளப்பட்டன என்பதைப் பின்னால் அவர்கள் உணர்ந்திருப்பார்கள். சிலர் அழிவுச் செயல்களில் ஈடுபடப் போவதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்தது. உதாரணமாக 25-ம் தேதி, அதற்கு முன்தின இரவே, அதாவது மறுநாள் காலை மெரினா கடற் கரையில் நடக்கப்போகும் குடியரசு அணிவகுப்பிற்காக அமைக்கப்பட்டிருந்த பந்தலுக்குத் தீ வைப்பதென்ற முயற்சி, ஒரு எண்ணம் இருந்தது. அதேமாதிரி தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்ற பொருட்காட்சிக்குத் தீ வைப்பது என்ற முயற்சி குறித்து எல்லாம் அரசாங் கத்திற்குத் தகவல் வந்தது. 25-ம் தேதி இரவே அவைகளைச் செய்வதற் கான சதி நடந்ததென்று அரசாங்கத்திற்குத் தெரியும். யார் என்று சொல்வதிற்கில்லை.

திரு. எம். எஸ். மணி : ஸார், 26-ம் தேதி, துக்க தினம் கொண்டாடு வதன் அறிகுறியாக வீட்டிலே கறுப்புக்கொடி ஏற்றுவதை அகற்றும்படி போலீஸாருக்கு உத்திரவு இடப்பட்டுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் உத்திரவு இடப்படவில்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : துக்க தினம் கொண்டாடுகிறார்கள் என்று முன் கூட்டியே தெரிந்திருந்தும் சம்பந்தப்பட்ட தலைவர்களை அழைத்து ஆலோசனை செய்யாததன் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தச் சட்ட சபையிலேயே நான் குறிப்பிட்டேன், வேண்டிக்கொண்டேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : 26-ம் தேதி துக்க தினம் கொண்டாடு வதையொட்டி கழகத்தைச் சேர்ந்த தலைவர் அறிஞர் அண்ணா, எதிர்க் கட்சித் தலைவர், துணைத் தலைவர் மற்றும் ஏழு பேர்கள் கலந்துகொண்டு கூட்டம் நடத்துவதாக இருந்தது. அந்தக் கூட்டத்தில் கழகத் தலைவர்கள் மீது திராவகத்தை ஊற்ற வேண்டுமென்று ஒரு சதி இருந் தது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? 26-ம் தேதி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாதுகாப்புக் கோரி எழுதிய கடிதத்திற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தகவல் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்துகிற வகையில் தங்கள் வீடுகளில் கறுப்புக்கொடி கட்டுவதற்கும் தங்கள் உடலில் கறுப்புச் சின்னம் அணிவதற்கும் மக்களுக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது உரிமைப் பிரச்னை அல்ல. முறை தவறிய பிரச்னை. குடியரசு தினத்தன்று துக்கத்தைக் காட்டு கிறேன் என்று சொல்லுவது ரொம்ப முறை தவறியது என்றுதான் சொல்லுகிறேன். உரிமை என்பது வேறு விஷயம். எதற்கும் உரிமை கொண்டாடலாம்.

18th March 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் குழு செயலாளர் என்ற முறையில் என்னை அழைத்து, "26-ம் தேதி அன்றைய தினம் நடத்த இருக்கிற துக்க தினத்தை நுங்கம்பாக்கம் மைதானத்தில் நடத்திக்கொள்ளுங்கள்" என்று போலீஸ் கமிஷனர் அனுமதி அளித்திருந்தார்கள். பிற்பாடு அதை மாற்ற வேண்டிய நிர்ப் பந்தம் எப்படி ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸ் அதிகாரி யார் அந்த மாதிரி உத்திரவு கொடுத்தாரோ அவரைக் கேட்டால்தான் தெரியும். நான் அவரைக் கேட்ட பிறகு கனம் அங்கத்தினர் இன்னொரு கேள்வி கேட்டால் அதைப் பற்றிச் சொல்லலாம். போலீஸார் அப்போதைக் கப்போது அவர்களுடைய கடமையைச் செலுத்த வேண்டியிருக்கிறது. அவர்கள் பார்த்து என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என்று சொல்லுகிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : சுதந்திர தினத்தன்று துக்க நாள் கொண் டாடும் காரணத்தினால் அந்நிய நாடுகளில், விரோதி நாடுகளில், தப்பான அபிப்பிராயம் ஏற்படும் அல்லவா ? அது நமது சுதந்திரத்திற்கு ஊறு விளைவிக்கும் அல்லவா ? பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அத்தனை பேர் களையும் காவலில் வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்நிய நாட்டில் என்ன நினைப்பார் கள் என்பது வேறு விஷயம். அதை விட முக்கிய விஷயம் சுதந்திரக் கட்சி தலைவரே, "எல்லையிலே ஆக்கிரமித்திருக்கிற சீனாக்காரர்களே நாம் பலவீனப்பட்டுப் போய்விட்டோம் என்று நினைப்பார்களே" என்று சொன் னதை திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு நான் குறிப்பிட்டேன். என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை அரசாங்கம் அப்போதைக் கப்போது கவனித்து அதன்படி முடிவு செய்கிறது.

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்க அம்பலம் : திராவிட முன்னேற்றக் கழகத்தினர், அவர்கள் வீடுகளிலே கொடி ஏற்றியும்,— கருப்புச் சின்னத்தை அணிந்தும் தான் கொண்டாடுவதாக முடிவு செய் தார்கள். அதைத் தடை செய்து அரசாங்கம் உத்திரவிட்டது. அதைப் போல இயற்கையாக துக்க தினம் ஏற்படும்போது அதையும் தடை செய்வார்களோ என்று அஞ்சுகிறார்களே, அதை அரசாங்கத்தினர் விளக்கு வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தடை செய்வது ஒன்றும் இல்லை. போலீஸார் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்றால் அதைத் தடுக்க தடுப்பு நடவடிக்கை என்ன எடுக்கவேண்டுமோ அதை எடுக்கிறார்கள். குடியரசு தினத்தையொட்டி, அந்த நாளை, துக்க தினமாகக் கொண்டாடு வதைத் தான் ஆட்சேபிக்கிறோமே தவிர, இயற்கையிலேயே துக்கம் ஏற்படுமானால் அதைக் கொண்டாடுவதை ஆட்சேபிக்கவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : முன்பெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் குடியரசு தினத்தைக் கொண்டடியிருக்கிறது. இந்த ஆண்டும் குடியரசு தினத்தைக் கொண்டாடக்கூடாது என்பது கருத்து அல்ல. சொந்த முறையில், தனிப்பட்ட முறையில், அன்று இந்தி திணிக்கப்படு வதைக் குறித்து, கழகத்தின் அதிருப்தியைத் தெரிவிக்கும் முறையில், கொண்டாடப் போகிறோம் என்ற விஷயத்தைப் பல தடவைகள் நாங்கள் குறிப்பிட்டும், இங்கே முதல் அமைச்சர் அவர்கள் 'வேண்டிக்கொண்டேன்' என்று சொன்னார்கள். ஆனால் பேசிய தோரணை மிரட்டுவதாக இருந்தது. இது குறித்துத் தலைவர்களைக் கூட்டிப் பேசியிருந்தால் அத்தனைய நிகழ்ச்சிகள் ஏற்படக் காரணமாக அமைந்திருக்காது அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் பேசியதில் மிரட்டுதல் ஒன்றும் இல்லை. எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். இந்திக்காக துக்கம் கொண்டாடவேண்டும் என்று சொன்னால், 25-ம் தேதி அல்லது 27-ம் தேதி கொண்டாடலாம், ஆனால் 26-ம் தேதி கொண்டாடக்கூடாது என்று சொன்னேன். அதற்குப் பிறகு கலந்து பேச ஒன்றும் இல்லை.

[18th March 1965

திரு. டி. கார்ச்சா கவுடர் : திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் குரு ராஜாஜி, 'துக்க தினம் கொண்டாடவேண்டாம்' என்று ஆலோசனை கூறியும் அவர்கள் ஏன் கேட்கவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் போடப்பட வேண்டும். எனக்குப் போடக்கூடாது.

திரு. காஞ்சி மணிமொழியார் : தலைவர் அவர்களே, 26-ம் தேதி யன்று தனிப்பட்டவர்களுடைய வீடுகளில் புகுந்து, அவர்கள் அனுமதி இல்லாமல் புகுந்து, அவர்கள் வீட்டின் மேலே கட்டியிருந்த கொடிகளை அறுத்துக் கொளுத்தியிருக்கிறார்களே, அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாக இம்மாதிரிக் கேள்வி போட்டால் அதற்கு ஒன்றும் பதில் அளிக்கமுடியாது.

புலவர் கா. கோவிந்தன் : 26-ம் தேதியன்று இந்தி ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டதால்தான் அன்று துக்க தினம் கொண்டாடப்படுகிறது, அதை வேறு ஒரு நாளுக்கு மாற்றியிருந்தால் குடியரசு நாள் அன்று துக்க தினம் கொண்டாடப்படமாட்டாது என்று சொல்லப்பட்டது. அம்மாதிரி அதை மாற்றச் செய்யாது இருந்த காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு ஒன்றும் காரணம் இல்லை. 26-ம் தேதி அரசியல் அமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தால் அதை மாற்ற முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : 26-ம் தேதி நுங்கம்பாக்கம் கூட்டத்தில் கலவரம் விளைவிப்பதாகவும், தீப்பந்த ஊர்வலம் எடுப்பதாகவும் பகிரங்கமாக அறிவித்த காங்கிரஸ் பிரமுகர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? ஏன் அவர்களைக் கைது செய்யவில்லை என்று அமைச்சர் கூறுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார்மீது எம்மாதிரி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது போலீஸார் பொறுப்பு. போலீஸார் தவறுதல் செய்கிறார்களா அல்லது சரியாகச் செய்கிறார்களா என்று கவனிக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. இதில் ஒன்றும் தவறு இல்லை.

1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதியில் தி.மு. கழகத்தினர்கள் கைது

*265 கேள்வி.—**திரு. செ. மாதவன், திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) 1965-ம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் ?

(இ) அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Two thousand two hundred and ninety-four D.M.K. persons were arrested in the State on 25th/26th January 1965 and 26th January 1965.

(*b*) Two thousand and fifty-six persons were taken into preventive custody as it was apprehended that their activities in connection with the observance of mourning day on 26th January 1965 would endanger the law and order situation and lead to breach of peace. The remaining 238 persons were arrested for specific offences.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், 25-ம் தேதி இரவு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கறுப்புக்கொடி ஏற்றிவிடுவார்கள் என்று அரசாங்கம் கைது செய்ததாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்ற